சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08

ந.க.எண்.5207/ஈ3/2021 நாள். 9 .03.2022

பொருள் பள்ளிக்கல்வி - மெட்ரிகுலேசன் பள்ளிகள் - சென்னை மாவட்டம் - குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் - 2009 பிரிவு 12 (1) (சி) இன் கீழ் 25% ஒதுக்கீடு - 2021 - 2022 ஆம் கல்வியாண்டு - தனியார் பள்ளிகளுக்கு கட்டண நிர்ணய குழுவால் நிர்ணயம் செய்து வழங்கப்பட்ட கட்டண விவரங்களை EMIS Portal இல் வகுப்பு வாரியாக பதிவேற்றம் செய்திடும் பணி குறித்தான அட்டவணை விவரம் - தொடர்பாக.

பார்வை தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.1216/இ1/2021 நாள்.24.02.2022.

........

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் - 2009 பிரிவு 12 (1) (சி) இன்படி 25 % ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை வழங்கப்பட்டு கல்வி பயின்று வரும் குழந்தைகளுக்குரிய கேட்புத் தொகை வழங்குவது தொடர்பாக, தனியார் பள்ளிகளுக்கு கட்டண நிர்ணயக் குழுவினால் நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்பட்ட கட்டண விவரங்களை வகுப்பு வாரியாக பள்ளித் தகவல் மேலாண்மை முறைமை (EMIS) இணையதளத்தில் CEO Login இல் பதிவேற்றம் செய்திட பார்வையில் காணும் செயல்முறையின்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பணியானது DON BOSCO MATRIC HR. SEC. SCHOOL, EGMORE, CHENNAI - 08 பள்ளியில் வைத்து கீழ்காணும் அட்டவணையின்படி நடைபெறவுள்ளது.

| வ.எண். | மாவட்டக்கல்வி அலுவலகம் | வட்டாரக்கல்வி அலுவலகம் | ஒதுக்கீடு செய்யப்படும் தேதி |
|---|---|---|---|
| 1 | கிழக்கு சென்னை | திருவல்லிக்கேணி - இராயபுரம் | 14.03.2022 |
| 2 | மேற்கு சென்னை | புரசைவாக்கம் - ஜார்ஜ் டவுன் | 14.03.2022 |
| 3 | தென் சென்னை | தி.நகர் - எழும்பூர் | 15.03.2022 |
| 4 | வட சென்னை | பெரம்பூர் - பெரியமேடு | 16.03.2022 |
| 5 | மத்திய சென்னை | அடையாறு - மயிலாப்பூர் | 17.03.2022 |

அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதிகளில் அந்தந்த மாவட்டக்கல்வி அலுவலகம் மற்றும் வட்டாரக்கல்வி அலுவலக வரம்பிற்குள் செயல்பட்டு வரும் அனைத்து உதவிபெறும் / சுயநிதி பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளிக்கு தமிழ்நாடு கல்விக் கட்டண நிர்ணயக் குழுவால் நிர்ணயம் செய்து வழங்கப்பட்டுள்ள கட்டண விவரங்களை மட்டும் EMIS Portal இல் பதிவு செய்திடும் வகையில் ஆசிரியர் / பணியாளர் ஒருவரை அனுப்பிட கேட்டுக்கொள்ளப்படுகிறது. மெட்ரிகுலேசன் /

நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிகளின் முதல்வர்கள் கல்விக் கட்டண நிர்ணய ஆணையின் நகலுடன் (சான்றொப்பமிட்டு) RTE இன்படி சேர்க்கை வழங்கப்பட்டு, கல்வி பயின்று வரும் மாணவர்களின் எண்ணிக்கை விவரத்துடன் RTE / EMIS பணியினை மேற்கொள்ளும் ஆசிரியர் / பணியாளர் ஒருவரை தவறாது அனுப்பிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி ஒதுக்கீடு செய்யப்பட்ட நாட்களில் சார்ந்த மாவட்டக்கல்வி அலுவலகத்தின் சார்பில் பள்ளித் துணை ஆய்வாளரையும், வட்டாரக்கல்வி அலுவலகம் சார்பில் பொறுப்பு ஆசிரியர் ஒருவரையும் இப்பணிக்கென நியமனம் செய்து, அதன் விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவித்திட அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் மற்றும் அனைத்து வட்டாரக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி ஒதுக்கீடு செய்யப்படும் நாட்களில் இப்பணியினை தவறுகள் ஏதுமின்றி செவ்வனே முடித்திடும் வகையில் அந்தந்த மாவட்டக்கல்வி அலுவலக வரம்பிற்குள் செயல்பட்டு வரும் வட்டார வளமைய மையத்தில் RTE சார்பான பணியினை மேற்கொள்ளும் ஆசிரியர் பயிற்றுனர்கள் CEO Login இல் பதிவேற்றம் செய்திடும் பணியினை மேற்கொள்ளும் பொருட்டு அவ்வாசிரியர்களை பணியிலிருந்து விடுவித்திட சமக்ரக சிக்ஷா மாவட்ட உதவி அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

கட்டண நிர்ணய விவரங்களை பதிவேற்றம் செய்திடும் பொழுது பள்ளியில் RTE இன்படி சேர்க்கை வழங்கப்பட்டு, கல்வி பயின்று வரும் மாணவர்களின் எண்ணிக்கை விவரத்தினையும் சரிபார்த்திடல் வேண்டும்.

2021 - 2022 ஆம் கல்வியாண்டுக்குரிய RTE கேட்புத் தொகை EMIS இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் கல்வி கட்டணங்களின் அடிப்படையில் தான் பள்ளிகளுக்கு வழங்கப்படும் என்ற நிலையில் இப்பணியிலும் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படவுள்ள RTE சார்பான பணிகளில் விவரங்கள் விடுபடாமலும், தவறுகள் இன்றியும் கவனமுடன் செயல்பட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

முதன்மைக்கல்வி அலுவலர்

சென்னை.

பெறுநர்

1. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.
2. திட்ட உதவி அலுவலர், சமக்ரக சிக்ஷா, சென்னை மாவட்டம்.
3. அனைத்து வட்டாரக்கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.
4. தலைமையாசிரியர்கள், உதவிபெறும் பள்ளிகள், சென்னை மாவட்டம்.
5. முதல்வர்கள், சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகள், சென்னை மாவட்டம் (மெட்ரிகுலேசன் மற்றும் நர்சரி & பிரைமரி பள்ளிகள்)

நகல்

1. இயக்குநர், மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம், சென்னை-06 தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. முதல்வர், Don Bosco Matric Hr. Sec. School, Egmore, Chennai - 08 உரிய இடவசதி மற்றும் கணினி வசதிகள் செய்து தந்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.